

கழக துணைப் பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்ட திருச்சி சிவா, கழக இளைஞர் அணிச் செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களை சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் கழக செய்தித் தொடர்புத் தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், கழக துணை அமைப்புச் செயலாளர் தாயகம் கவி எம்.எல்.ஏ. ஆகியோர் உள்ளனர்.



கழக துணைப் பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்ட திருச்சி சிவா, சென்னை கடற்கரையில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் நினைவிடங்களில் மலர்தூவி மரியாதை செலுத்தினார். உடன் கழக செய்தித் தொடர்புத் தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், கழக துணை அமைப்புச் செயலாளர் தாயகம் கவி எம்.எல்.ஏ. உள்ளிட்ட கழக முன்னணியினர் உள்ளனர்.

### கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# அன்னம் தரும் அமுதக்கரம் 51வது நாள்!

## துறைமுகம் கிழக்குப் பகுதியில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்!

சென்னை, ஏப்.12-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 51 ஆம் நாளான கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (11.4.2025) துறைமுகம் கிழக்கு பகுதி இடம்: 1) வட்டம் 55 ஆ ஆச்சாரப்பன் தெரு, ஏழு கிணறு, சென்னை.2) துறைமுகம் மேற்கு பகுதி வட்டம் 57 அண்ணா பிள்ளை தெரு டேவிட்சன் தெரு, சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு “தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்கள்.



இந்நிகழ்ச்சியில் சென்னை பெருநகர மாநகராட்சி மேயர் பிரியா ராஜன் எஸ்.முரளி, எஸ். இராஜசேகர், பி.ஸ்ரீராமுலு, ஜி.எம்.தேவன், எம்.விஜயகுமார், என்.பி.எம்.ஷேக்அப்துல்லா, இப்ராஹிம்கனி, ஆர்.கலைச்செல்வி, பி.விஜயகுமார், எல்.சம்பத்குமார், பா.பிரதாப்குமார், எம். விநாயகம், ப.ஜெகதீஷ் துறைமுகம் கிழக்கு / மேற்கு வட்ட கழக செயலாளர்கள்: எல்.சத்தியநாராயணன், எஸ்.புகழேந்தி, ஆர்.எ.அஸ்லாம், டி.கதிரவன் (எ) ராஜா, எம்.பரத்குமார், கே.கவியரசு, ஆ.நா. பார்த்திபன், எம்.ஜெய்சங்கர், பா.கதிரவன், ஆர்.இரவிச்சந்திரன், ஜி.ராமமூர்த்தி, பா. அண்ணாதுரை, டி.சதிஷ்குமார், வே.பா.பிரபாகரன் ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ். முரளி, பெரம்பூர் ஆர். ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

# 2024-ஆம் ஆண்டிற்கான கலைஞர் எழுதுகோல் விருது!

## மூத்த பத்திரிகையாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன!

சென்னை, ஏப்.12-

ஒவ்வோர் ஆண்டும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த தினமான ஜூன் 3 ஆம் நாளன்று, ஒரு சிறந்த இதழியலாளருக்கு “கலைஞர் எழுதுகோல் விருது” வழங்கி கௌரவிக்கப்படும் என ஆணை வெளியிடப்பட்டுள்ளது. அவ்வகையில் 2024 ஆம் ஆண்டிற்கான இவ்விருதுக்குரிய விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இவ்விருதில் ரூபாய் ஐந்து இலட்சம் பரிசுத் தொகையுடன் பாராட்டுச் சான்றிதழும் அடங்கும். கலைஞர் எழுதுகோல் விருதுக்கான தகுதிகள் பின்வருமாறு :

விண்ணப்பதாரர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும்.

தமிழ் இதழியல் துறையில் குறைந்தபட்சம் பத்து ஆண்டுகளாக தொடர்ந்து பணிபுரிந்திருக்க வேண்டும்.

பத்திரிகைப் பணியை முழுநேரப் பணியாகக் கொண்டிருக்க வேண்டும்

இதழியல் துறையில் சமூக மேம்பாட்டிற்காகவும், விளிம்புநிலை மக்களின் மேம்பாட்டிற்காகவும், பெண்களின் முன்னேற்றத்திற்காகவும், பங்காற்றியிருக்க வேண்டும்.

விண்ணப்பதாரரின் எழுத்துகள் பொதுமக்களிடையே நல்ல தாக்கத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும்.

விண்ணப்பதாரர் நேரடியாகவோ, மற்றொருவர் பரிந்துரையின் அடிப்படையிலோ பணிபுரியும் நிறுவனத்தின் பரிந்துரையின் பேரிலோ விண்ணப்பங்களை அனுப்பலாம்.

விண்ணப்பதாரர்களில் ஒருவரே விருதாளராக அரசால் அமைக்கப்பட்டுள்ள தேர்வுக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் தேர்வு செய்யப்படுவார்.

குழுவின் முடிவே இறுதியானது.

மேற்காணும் தகுதிகளை கொண்ட விண்ணப்பங்கள், விரிவான தன் விவரங்கள் மற்றும் அவற்றுக்குரிய ஆவணங்களுடன் இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை 600 009 என்ற முகவரிக்கு 30.04.2025க்குள்ளாக அனுப்பி வைக்கப்பட வேண்டும்.




தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர் அரசு மருத்துவமனையில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (11.04.2025) திடீர் ஆய்வு மேற்கொண்டு, நோயாளிகளுக்கு அளிக்கப்படும் சிகிச்சைகள் குறித்து மருத்துவரிடம் கேட்டறிந்தார்.

### மதுரை மேற்கு - காளவாசலில் இருந்து அரசரடி வரை கடும் போக்குவரத்து நெரிசல்!

# மதுரையின் தென் பகுதியில் புறவழிச்சாலை - அரசு பரிசீலிக்கும்!

## சட்டப் பேரவையில் - அமைச்சர் எ.வ.வேலு விளக்கம்!

சென்னை, ஏப். 12 -

“மதுரையில் போக்குவரத்து நெரிசலைச் சமாளிக்க, தென் பகுதியில் ஒரு புறவழிச் சாலை அமைக்க வேண்டுமெனும் கோரிக்கை, அரசின் ஆய்வில் உள்ளது. அக்கோரிக்கையை அரசு பரிசீலித்து வருகிறது” என்று, சட்டப் பேரவையில் பொதுப் பணிகள் மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் எ.வ.வேலு குறிப்பிட்டார்.



கேள்வி நேரத்தின் போது நடைபெற்ற விவாதம் வருமாறு:

**செல்லூர் கே.ராஜு:** மதுரையில் மக்கள்பெருக்கம் அதிகமாகி விட்டது. வண்டி, வாகனமும் அதிகமாகி விட்டது. எங்கள் மேற்கு தொகுதியில், காளவாசலில் இருந்து அரசரடி பகுதி வரை போக்குவரத்து நெரிசல் கடுமையாக இருக்கிறது. இதில் கோட்டையம், கொச்சி, ஏர்ணாகுளம் அதேமாதிரி மூனாறு செல்வதற்கும் ஒரே சாலை இருக்கிறது. கடை நெருக்கடியும் போக்குவதற்கு, . . .

மாற்று வழியாக முதலமைச்சர் அவர்கள் இப்போது தீக்கதிரிலிருந்து சமயநல்லூர் வரை ஒரு road போடுகிறார்கள். அதேமாதிரி, தென்பகுதியிலும் ஒரு சாலை அமைத்தால், அங்கு புறவழிச்சாலை வைகை ஆற்றை ஒட்டி அமைத்தால், இட நெருக்கடி இருக்காது.

**அமைச்சர் எ.வ. வேலு:** தென்பகுதியில் இருக்கிற மதுரைக்கு முக்கியத்துவம் தர வேண்டுமென்ற அடிப்படையில்தான், தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற உடனேயே, நகரப்பகுதியில் இருக்கிற அந்த நெரிசலை குறைப்பதற்காக இரண்டு பாலங்களை அவர்களுடைய திருக்கரத்தாலே துவக்கி வைத்து, பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஒன்று கோரிப்பாளையம் பாலம்; இன்னொன்று Apollo பாலம். அவர் சொல்கிற தென்பகுதியில் இன்னோரு புற வழிச் சாலை அமைக்க வேண்டுமென்பது அவசியம்தான். ஆனால் அதுசம்பந்தமாக, துறையின் சார்பாக, அது fit ஆக இருக்கின்றதா என்று பார்ப்பதற்காக துறையிலே ஆய்விலே இருக்கிறது. அந்த ஆய்வு முடிந்தவுடனே, முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று, நில எடுப்புக்கு வேண்டிய பணம் ஒதுக்கபட்டு, அந்தப் பணிக்கு முக்கியத்துவம் தரப்படும்.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.

# சென்னையில் 2 திருக்கோயில்களில் ரூ.4.41 கோடி மதிப்பீட்டிலான திருப்பணிகள்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார்!

சென்னை, ஏப்.12

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (11.04.2025) சென்னை, பெரம்பூர், சேமாத்தம்மன் திருக்கோயிலில் ரூ.52 இலட்சம் மதிப்பீட்டில் மகாமண்டபம் கட்டும் பணிக்கும், வியாசர்பாடி கரபாத்திர சிவப்பிரகாச சுவாமிகள் மடாலயத்தில் ரூ.3.89 கோடி மதிப்பீட்டில் யோகா தியான மண்டபம், நூலகம் மற்றும் அன்னதானக் கூடங்களை கட்டும் பணிக்கும் அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார்.

இந்து சமய அறநிலையத் துறையானது தனது நிர்வாகக் கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்களில் குடமுழுக்கு நடத்துதல், திருக்கோயில் சொத்துகளை ஆக்கிரமிப்பிலிருந்து மீட்டெடுத்து பாதுகாத்தல், பக்தர்களுக்கான அடிப்படை வசதிகளை மேம்படுத்தி வழங்குதல் போன்ற பல்வேறு பணிகளை சீரிய முறையில் மேற்கொண்டு வருவது.

அந்த வகையில் பெரம்பூர், சேமாத்தம்மன் திருக்கோயிலில் ரூ.52 இலட்சம் மதிப்பீட்டில் பழுதடைந்த மகாமண்டபத்தினை மறுசீரமைத்து புதுப்பிக்கும் பணி மற்றும் வியாசர்பாடி கரபாத்திர சிவப்பிரகாச சுவாமிகள் மடாலயத்தில் ரூ.3.89 கோடி மதிப்பீட்டில் யோகா தியான மண்டபம், நூலகம் மற்றும் அன்னதானக் கூடம் கட்டும் பணி என 2 திருக்கோயில்களில் ரூ.4.41 கோடி மதிப்பீட்டிலான புதிய கட்டுமான பணிகளை அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சிகளில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி பிரியா ராஜன், சட்டமன்ற உறுப்பினர் தாயகம்கவி, இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், கூடுதல் ஆணையர் டாக்டர் சி.பழனி, வடபழனி அருள்மிகு ஆண்டவர் திருக்கோயில் தக்கார் ல. ஆதிமூலம், இணை ஆணையர் திருமதி ஜ.முல்லை, மாநகராட்சி மண்டலக் குழு தலைவர் திருமதி சரிதா மகேஷ்குமார், துணை ஆணையர் இரா.ஹரிஹரன், மாநகராட்சி உறுப்பினர் டில்லிபாபு, திருக்கோயில் தக்கார் மா.ஆச்சிசிவப்பிரகாசம், செயல் அலுவலர் க.பிரபாகரன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### மா.சிகாமணி - கீதா சிகாமணி தலைமை! க.கோவிந்தராஜ் - மெட்டில்டா கோவிந்தராஜ் முன்னிலை!

# அண்ணாநகரில் டாக்டர் கலைஞர் பொது நல மன்றம் சார்பில் நீர் மோர் பந்தல் திறப்பு விழா!

## நே.சிற்றரசு - தயாநிதி மாறன் - எம்.கே.மோகன் - ச.பரமசிவம் - கார்த்திக் மோகன் பங்கேற்பு!

சென்னை, ஏப். 12

சென்னை மேற்கு மாவட்டம், அண்ணாநகர் வடக்குப் பகுதி, 101 வது வட்டத்தில் டாக்டர் கலைஞர் பொது நல மன்றம் சார்பில் தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கு இணங்க, மக்கள் தாகம் தீர்க்க நீர் மோர் பந்தல் திறப்பு விழா இன்று (12.04.2025 சனிக்கிழமை) காலை 10 மணியளவில், அண்ணாநகர், கீழ்ப்பாக்கம் கார்டன் காலனியில் நடைபெறுகிறது.

மன்றச் செயலாளர் மா.சிகாமணி, மன்ற ஆலோசகர், முன்னாள் வட்ட துணைச் செயலாளர் கீதா சிகாமணி ஆகியோர் தலைமை வகிக்கின்றனர்.

101 வது வட்டக் கழகச் செயலாளர் க.கோவிந்த ராஜ், 101 வது வார்டு மாமன்ற உறுப்பினர் மெட்டில்டா கோவிந்தராஜ் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

ஆர்.ஜி.கருணாநிதி, கே. சீனிவாசன், எம்.ராஜா, எம். மணிகண்டன், சி.பிரகாஷ், மதுரை சேகர், முருகேசன், சுந்தர் ராஜன், சி.ஜானகிராமன் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்டக் கழகச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன், அண்ணாநகர் சட்டமன்ற உறுப்பினர் எம்.கே. மோகன், பகுதிக் கழகச் செயலாளர் ச.பரமசிவம், கழக தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் கார்த்திக் மோகன், அண்ணாநகர் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் தமிழன் பிரசன்னா ஆகியோர் கலந்து கொண்டு நீர் மோர் பந்தலினை திறந்து வைக்கின்றனர்.

இதில் தலைமை செயற்குழு உறுப்பினர் எஸ்.சேகர், தலைமை பொதுக்குழு உறுப்பினர் ஏ.டி.முருகன், கழக மகளிர் அணி பிரச்சாரக்குழு செயலாளர் ராணி ரவிச்சந்திரன் எம்.சி, தலைமை பொதுக்குழு உறுப்பினர் கராத்தே என்.ஆனந்தன் மற்றும் மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக, மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட, பகுதி கழக அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

### 100 நாள் வேலை திட்ட நிதியை

# ஒன்றிய அரசு காலவரையின்றி நிறுத்தி வைக்க முடியாது!

## கொல்கத்தா உயர்நீதிமன்றம் கருத்து!

கொல்கத்தா, ஏப்.12-

மாநிலங்களுக்கான மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்ட நிதியை, ஒன்றிய அரசு காலவரையின்றி நிறுத்தி வைக்க முடியாது என கொல்கத்தா உயர்நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

மாநிலங்களுக்கான மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்ட நிதியை விடுவிக்காமல் ஒன்றிய பாஜக அரசு நிறுத்தி வைத்துள்ளது. நிலுவையில் உள்ள நிதியை வழங்க வேண்டுமென மாநில அரசுகள் ஒன்றிய அரசை வலியுறுத்தி வருகின்றன.

இந்நிலையில், 100 வேலை திட்ட நிதி தொடர்பான வழக்கு கொல்கத்தா உயர்நீதி மன்றத்தில், தலைமை நீதிபதி டி.எஸ். சிவஞானம் மற்றும் நீதிபதி சைதாலி சட்டர்ஜி ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது. வழக்கை விசாரித்த நீதிபதிகள், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்ட விதிகளின் படி, மாநிலங்களுக்கான நிதியை நிரந்தரமாக நிறுத்தி வைக்க முடியாது எனத் தெரிவித்தனர். மேற்கு வங்கத்தில் 2022 முதல் நிறுத்தப்பட்டுள்ள கிராமப்புற வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தை ஏன் செயல்படுத்தக்கூடாது என்று ஒன்றிய அரசுக்கு கேள்வி எழுப்பிய நீதிபதிகள், திட்டத்தின் நிதியை நிறுத்தி வைத்தது தொடர்பாக விளக்கமளித்து ஒன்றிய அரசு பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்ய உத்தரவிட்டனர். வழக்கின் அடுத்த விசாரணை மே 15ம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.